# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2497/35 - 2026 ජූලි මස 15 වැනි බදාදා - 2026.07.15**

2497/35 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதி புதன்கிழமை

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

**25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட GL 24 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னோலொஜி (உத்தரவாதம்) லிமிட்டெட் தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும், 2025 ஓகத்து 21 ஆந் திகதிய 2450/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை அதற்கான நிரல் I இல் காணப்படும் "மென்பொருள் பொறியியலில் விஞ்ஞான இளமாணி சிறப்பு" என்னும் பதிவையும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவையும் உடனடுத்து, அதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I இன் கீழும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்;-

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னோலொஜி (உத்தரவாதம்) லிமிட்டெட் ஆனது, பின்வருவன தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது :-

   (அ) சைபர் பாதுகாப்பில் விஞ்ஞான இளமாணி சிறப்பு (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 6), கணினி முறைமை

மற்றும் வலையமைப்பு பொறியியலில் விஞ்ஞான இளமாணி சிறப்பு (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 6), தகவல் முறைமைகள் பொறியியலில் விஞ்ஞான இளமாணி சிறப்பு (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 6) மற்றும் ஆக்கபூர்வ கணினியியலில் விஞ்ஞான இளமாணி சிறப்பு (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 6) தொடர்பில் பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(i) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (உயர் தரத்தில்) பௌதிக விஞ்ஞான பாடத்துறையில் அல்லது பொறியியல் தொழினுட்பவியல் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் குறைந்தபட்சம் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள்: அல்லது

(ii) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (உயர் தரத்தில்) ஏதேனும் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் குறைந்தபட்சம் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் மற்றும் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (சாதாரண தரத்தில்) கணிதப் பாடத்தில் திறமைச் சித்தி (C) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் அத்துடன் குறித்துரைக்கப்பட்ட அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட இணைப்பு நிகழ்ச்சித் திட்டமொன்று: அல்லது

(iii) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (உயர் தரத்தில்) ஏதேனும் தடவையில், ஏதேனும் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பத்தில் சாதாரண சித்தியொன்றுடன் (S) குறைந்தபட்சம் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் மற்றும் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (சாதாரண தரத்தில்) கணிதப் பாடத்தில் திறமைச் சித்தி (C) அல்லது அதற்குச் சமமான தகைமைகள்.

2. ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னோலொஜி (உத்தரவாதம்) லிமிட்டெட் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

3. இன்போமெட்டிக் இன்ஸ்ரீரியூட் ஒப் டெக்னொலொஜி லிமிட்டெட் இக்கட்டளையின் வெளியீட்டுத் தேதியிலிருந்து ஒரு ஆண்டினுள் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்துக்கு மாணவர்களை அனுமதித்தல் வேண்டும்.

**அட்டவணை II**

| *நிரல் I*<br>பட்டம் | *நிரல் II*<br>பட்டத்துக்கான சுருக்கீடு |
|---|---|
| சைபர் பாதுகாப்பில் விஞ்ஞான இளமாணி சிறப்பு | பீஎஸ்சி சிறப்பு (சைபர் பாதுகாப்பு) |
| கணினி முறைமை மற்றும் வலையமைப்பு பொறியியலில் விஞ்ஞான இளமாணி சிறப்பு | பீஎஸ்சி சிறப்பு (கணினி முறைமை மற்றும் வலையமைப்பு பொறியியல்) |
| தகவல் முறைமைகள் பொறியியலில் விஞ்ஞான இளமாணி சிறப்பு | பீஎஸ்சி சிறப்பு (தகவல் முறைமைகள் பொறியியல்) |
| ஆக்கபூர்வ கணினியியலில் விஞ்ஞான இளமாணி சிறப்பு | பீஎஸ்சி சிறப்பு (ஆக்கபூர்வ கணினியியல்) |

கலாநிதி ஹரிணி அமரசூரிய
கல்வி, உயர் கல்வி மற்றும்
தொழிற்கல்வி அமைச்சர்

கொழும்பு,
2026, யூலை 09.

EOG 07 - 0197

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.